


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 03 | Issue: 261 | 4 Pages | 30.07.2026 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 261 | 4 பக்கங்கள் | 30.07.2026 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்**
**வானம் வழங்கா தெனின்**

**விளக்கம்:**
**மழை பெய்யவில்லையானால், இந்தப் பெரிய உலகத்தில் பிறர்பொருட்டுச் செய்யும் தானமும், தம் பொருட்டுச் செய்யும் தவமும் இல்லையாகும்.**

## ஒழுங்காற்று குழு உத்தரவை எதிர்த்து காவிரி நீர் நிர்வாக ஆணையத்தில் மேல்முறையீடு: கர்நாடகா அறிவிப்பு



பெங்களூரு, ஜூலை 30
காவிரி நீர் திறக்க வேண்டும் என்று பிறப்பித்த ஒழுங்காற்று குழுவின் உத்தரவை எதிர்த்து காவிரி நீர் நிர்வாக ஆணையத்தில் மேல்முறையீடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத்துறை மந்திரி ராமலிங்கரெட்டிகூறியுள்ளார்.

கர்நாடக நீர்ப்பாசனத்துறை மந்திரி ராமலிங்கரெட்டி டெல்லியில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில் கூறியதாவது: குடிநீர் இல்லை காவிரி நீர் ஒழுங்காற்று குழு தமிழகத்துக்கு காவிரியில் 15 நாட்களுக்கு வினாடிக்கு 3 ஆயிரத்து 500 கன அடி நீர் திறக்கும்படி உத்தரவிட்டுள்ளது. இதை எதிர்த்து காவிரி நீர் நிர்வாக ஆணையத்தில் மேல்முறையீடு செய்ய முடிவு செய்துள்ளோம்.

இதுகுறித்து அதிகாரிகளுக்கு உத்தரவிட் டுள்ளோம். இதுகுறித்து சட்ட நிபுணர்கள், உயர்அதிகாரிகளுடன்அவசரமாக ஆலோசனை நடத்துவோம். எங்களுக்கு குடிப்பதற்கு குடிநீர் இல்லை.இத்தகைய கடினமான நேரத்தில் தமிழகத்துக்கு எப்படி எங்களால் தண்ணீரை திறக்க முடியும். கர்நாடகத்தின் நலனை காக்க அரசு தயாராக உள்ளது. சட்ட போராட்டம் மூலம் விவசாயிகளின் நலனை காப்போம். மேகதாது திட்டத்துக்கு இருந்த தடங்கல்கள் கொஞ்சம் கொஞ்சமாக நீங்கி வருகின்றன. அதனால் மேகதாது திட்ட பணிகள் விரைவாக தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேகதாதுதிட்ட விஷயத்தில்அரசுக்கு தெளிவு உள்ளது. இந்ததிட்டத்துக்கு மத்திய அரசு விரைவில் அனுமதி வழங்கும் என்ற நம்பிக்கை உள்ளது. இந்த விஷயத்தில் சுப்ரீம் கோர்ட்டு தமிழகத்தின் ஆட்சேபனைகளை கவனத்தில் கொள்ளவில்லை. அதனால் மேகதாது திட்ட பணிகளை தொடங்க எந்த பிரச்சினையும் இல்லை. மேகதாது திட்ட அறிக்கையில் சில திருத்தங்களை செய்து மீண்டும் அனுமதி கேட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இந்த திட்டத்துக்கு தமிழ்நாட்டின் அனுமதி தேவை இல்லை என்று மத்திய அரசு மாநிலங்களவையில் கூறியுள்ளது. முதல்மந்திரி டி.கே. சிவக்குமாரை தமிழக முதல்அமைச்சர் விஜய் வருகிற 3ந் தேதி நேரில் சந்தித்துபேசஉள்ளார்.அதில்என்னமாதிரியானமுடிவுகள்எடுக்கப்படுகிறது என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும். மேகதாது அணை திட்ட பணிகளால் வனப்பகுதி மூழ்கும். அதற்கு ஈடாக மண்டியாவில் நிலம் வழங்கஆலோசித்துவருகிறோம்.இதுகுறித்துமந்திரிசபையில்ஆலோசித்து தீர்மானிக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## போராடிய இளைஞர்கள் மீது வழக்குப்பதிவு செய்தால்.. கரப்பான் பூச்சி ஜனதா கட்சி எச்சரிக்கை



டெல்லி, ஜூலை 30
போராட்டக்காரர்கள் மீது பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் பெறாவிட்டால் நாடு தழுவிய போராட்டத்தை மீண்டும் தொடங்க வேண்டிய நிலை ஏற்படும் என்று கரப்பான் பூச்சி ஜனதா கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.நீட்வினாத்தாள் கசிவுக்கு எதிராக டெல்லி ஜந்தர் மந்தர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மாணவர்கள் நடத்திய போராட்டங்களின்போது போலீசார், வரம்பு மீறி பலப்பிரயோகத்தில் ஈடுபட்டதாக கூறி தொடரப்பட்ட மனுக்களை உச்சநீதிமன்றம் விசாரித்தது.இந்த வழக்கை தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு விசாரித்தபோது, அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது கட்டாய நடவடிக்கை எடுக்கக் கூடாது என்றும், முன்குற்றப் பதிவு இல்லாத போராட்டக்காரர்களை விடுவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது. அதே நேரத்தில், ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள எஃப்.ஐ.ஆர். வழக்குகளின் விசாரணையை டெல்லி மற்றும் பிற மாநில அரசுகள் தொடரலாம் என்றும், ஆனால் அமைதியான போராட்டக்காரர்கள் மீது கட்டாய நடவடிக்கை எடுக்கக் கூடாது என்றும் நீதிமன்றம் தெரிவித்தது. இந்த பாதுகாப்பு, குற்றப் பின்னணி கொண்டவர்களுக்குபொருந்தாதுஎன்றும்நீதிபதிகள்கூறினர்.இதையடுத்து, கரப்பான் பூச்சி ஜனதா கட்சியின் செய்தித் தொடர்பாளர் சவுரவ் தாஸ் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், இந்த உத்தரவு நாடு முழுவதும் கவலையை ஏற்படுத்துவதாக தெரிவித்துள்ளார். ஜூலை 25ஆம் தேதி மத்திய அரசு அளித்த உறுதியின்படி, போராட்டக்காரர்கள் மீதான எஃப்.ஐ.ஆர்.கள் வாபஸ் பெறப்படும் என்றும், அமைதியான போராட்டத்தில் பங்கேற்றவர்களுக்கு எந்த வகையிலும் தொந்தரவு அளிக்கப்படாது என்றும் கூறப்பட்டதன் அடிப்படையில்தான் நாடு தழுவிய போராட்டம் வாபஸ் பெறப்பட்டது என்று கூறியுள்ளார். ஆனால், தற்போது உச்சநீதிமன்ற உத்தரவை பயன்படுத்தி மத்திய அரசும், பா.ஜ.க. ஆளும் மாநில அரசுகளும் போராட்டக்காரர்கள் மீது பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளை தொடரும் அபாயம் இருக்கிறது. அரசு அளித்த பொதுவான உறுதியை மறைமுகமாக பலவீனப்படுத்த முடியாது. மத்திய அரசு மற்றும் பா.ஜ.க. தேசிய ஜனநாயக கூட்டணி ஆளும் மாநில அரசுகள் விரும்பினால் எஃப்.ஐ.ஆர்.களை வாபஸ் பெற்று, அமைதியான போராட்டக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்க முடியும். அரசு அளித்த வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்றி, அனைத்து எஃப்.ஐ.ஆர்.களையும் வாபஸ் பெற வேண்டும்.போராட்டத்தில்பங்கேற்றவர்கள்மீதுஇனிஎந்தநடவடிக்கையும் எடுக்கக் கூடாது. இது நடைபெறாவிட்டால், மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் உரிமையை பாதுகாக்கும் வகையில் நாடு தழுவிய போராட்டத்தை மீண்டும் தொடங்க வேண்டிய கட்டாயம் ஏற்படும்" என்று பதிவிட்டுள்ளார். கடந்த ஜூன் 20ஆம் தேதி முதல் வினாத்தாள் கசிவுக்கு எதிராக ஜந்தர் மந்தரில் தொடர் போராட்டத்தில் கரப்பான் பூச்சி ஜனதா கட்சி ஈடுபட்டது. கல்வி அமைச்சரின் பதவி விலகல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஜூலை 20ஆம் தேதி நாடாளுமன்றத்தை நோக்கி பேரணி நடத்தப்பட்டபோது, போலீசார் தடியடி, கண்ணீர்ப்புகை மற்றும் பெல்லட் குண்டுகளை பயன்படுத்தி போராட்டத்தை கலைத்தனர். அந்த சம்பவத்தில் 118க்கும் மேற்பட்ட போலீசாரும் காயமடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.கரப்பான்பூச்சிஜனதாகட்சியினரின்தொடர்போராட்டத்தால் கல்வி அமைச்சர் பதவியை தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்தார்.

# சென்னை-செய்யாறு இடையே 4 வழிச்சாலை டெண்டர் ரத்து செய்தது தவெக அரசு






சென்னை
சென்னையுடன், செய்யாறு தொழிற்தட பகுதியை இணைக்கும் வகையில், 43 கிமீக்கு நான்கு வழி சாலை அமைப்பதற்காக கடந்த திமுக ஆட்சியில் போடப்பட்ட டெண்டரை ரத்து செய்தது தவெக அரசு.சிங்கபெருமாள் கோவிலில் இருந்து செய்யாறு சிப்காட் வரை சாலை அமைக்க கடந்த மார்ச் மாதம் டெண்டர் கோரப்பட்டது.

சென்னையை ஒட்டியுள்ள காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் சிப்காட், சிட்கோ உள்ளிட்ட தொழிற்பேட்டைகளில் ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. அதேபோல் காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதிய தொழிற்சாலைகளும் தொடங்கப்பட்டுள்ளன. அருகிலுள்ள திருவண்ணாமலை மாவட்டத்திலும் தொழில் வளர்ச்சி அதிகரித்து வரும் நிலையில், செய்யாறு சிப்காட் வளாகத்தைச் சுற்றிய பகுதிகளிலும் புதிய தொழிற்சாலைகள் உருவாகி வருகின்றன. இதன் மூலம் ஏராளமான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், சென்னையில் இருந்து செய்யாறு சிப்காட் பகுதிக்கு கனரக வாகனங்கள் எளிதாகச் செல்ல போதிய அகலமான சாலை வசதி இல்லாததால், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொழிலில் ஈடுபட்டுள்ளவர்த்தகர்கள்பல்வேறு சிரமங்களை சந்தித்து வருகின்றனர்.

தற்போது சென்னை துறைமுகம், தென் சென்னை, ஒரகடம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர்சிப்காட்பகுதிகளில் இருந்து செய்யாறு நோக்கிச் செல்லும் கனரக வாகனங்கள் வாலாஜாபாத், காஞ்சிபுரம் வழியாகவே பயணிக்க வேண்டிய நிலை உள்ளது. காஞ்சிபுரம் நகரம், தூசி, மாமண்டூர் உள்ளிட்ட பகுதிகளில் சாலைகள் குறுகலாக இருப்பதுடன், கடும் போக்குவரத்து நெரிசலும் நிலவுவதால் பயணம் தாமதமாகிறது. இதற்கு தீர்வு காண வேண்டும் என்று வாகன ஓட்டிகள் மற்றும் வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதையடுத்து, சென்னை மற்றும் செய்யாறு தொழிற்பகுதியை நேரடியாக இணைக்கும் வகையில் புதிய நான்கு வழிச்சாலை அமைக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தச் சாலை, சிங்கப்பெருமாள் கோவில்ஒரகடம்நெடுஞ்சாலையில் இருந்து தொடங்கி, செய்யாறு சிப்காட் வரை சுமார் 43.2 கிலோமீட்டர் நீளத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்திற்காக 33 கிராமங்களில் மொத்தம் 619 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி, 60 மீட்டர் அகலத்தில் நவீன நான்கு வழிச்சாலை அமைக்க நெடுஞ்சாலைத்துறை திட்டமிட்டிருந்தது. இந்த சாலை அமைந்தால், கனரக வாகன போக்குவரத்து எளிதாகி, தொழில் மற்றும் வர்த்தக வளர்ச்சிக்கும் முக்கிய ஊக்கமாக அமையும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையில் சென்னை–செய்யாறு சிப்காட் பகுதியை இணைக்க, 43 கிமீக்கு நான்கு வழி சாலை அமைப்பதற்காக போடப்பட்ட டெண்டரை ரத்து செய்தது தவெக அரசு. மேலும் நிர்வாக காரணங்களுக்காக டெண்டர் ரத்து என விளக்கம் அளித்துள்ளது.

## "கழிப்பறைகள் சுத்தமாக இல்லாததால் அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை குறைவு அமைச்சரிடம் தலைமை ஆசிரியர்கள் புகார்



கழிப்பறைகள் சுத்தமாக இல்லாதது, அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை குறைவதற்கு முக்கிய காரணமாக உள்ளது' என, பள்ளிக் கல்வித் துறை அமைச்சரிடம், மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியர் சங்கம் சார்பில் புகார் தெரிவிக்கப்பட்டது.

பள்ளிக்கல்வித்துறை சார்பில், அனைத்து ஆசிரியர் சங்கங்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்சங்கங்களின்பொறுப்பாளர் களுடன்கலந்துரையாடல்கூட்டம், சென்னைகோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நேற்று நடந்தது.

பள்ளி கல்வி துறை அமைச்சர் ராஜ்மோகன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், 80க்கும் மேற்பட்ட சங்கங்களின் பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்....

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள், தமிழ்நாடு அரசு சிறப்பு டெட் தொடர்பாக ஒன்றிய அரசை வலியுறுத்தி சட்ட திருத்தம் கொண்டுவர வேண்டும் எனவும், பணிக்காலத்தை மதிப்பிட்டு சிறப்பு மதிப்பெண் வழங்கவேண்டும், பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்யவேண்டும்,சமவேலைக்குசமஊதியம்வழங்கவேண்டும், மேல்நிலைக் கல்விக்கு தனியாக இயக்குநகரம் உருவாக்க வேண்டும், பழைய ஓய்வுதியத் திட்டத்தை கொண்டுவர வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை மு ன்வைத்தனர்.

தொடர்ந்து கூட்டத்தில் பேசிய தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் கழக பொதுச்செயலர் ஞானசேகரன்..... அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை குறைவதற்கு, கழிப்பறை சுத்தமாக இல்லாதது, ஒரு முக்கிய காரணமாக உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன், மேல்நிலைப் பள்ளிகளில், 55 லட்சம் மாணவர்கள் படித்தனர். தற்போது, 45 லட்சம் மாணவர்களே உள்ளனர். இதை சரி செய்யாமல் பள்ளி நடத்த முடியாது. அரசு முதலில் இதில் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்

## செம்மஞ்சேரி பகுதியில் குடிநீர் வழங்காததை கண்டித்து அப்பகுதி மக்கள் காலி குடங்களுடன் போராட்டம்



சென்னை, ஜூலை 30
சென்னை மாநகராட்சி சோழிங்க நல்லூர் 15 வது மண்டலம் 200வது வார்டுக்குட்பட்ட ஜவகர் நகர், ஏழில்முக நகர்பகுதியில்சுமார்500க்கும்மேற்பட்ட குடும்பங்கள் கடந்த 25 ஆண்டுகளாக வசித்து வருகின்றனர்.இப்பகுதி மக்களுக்கு குழாய் மூலம் குடிநீர் விநியோகப்பட்டு வருகிறது. அது மட்டுமல்லாமல் அப்பகுதியில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து லாரிகள் மூலம் குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. இருந்த போதிலும் குடிநீர் போதுமானதாக இல்லை என பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.இந்நிலையில் கடந்த சில தினங்களாக அப்பகுதிக்கு குடிநீர் சப்ளை செய்யப்படவில்லை . இதனால் அப்பகுதி மக்கள் குடிநீர் இன்றி பெரிதும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இது குறித்த அப்பகுதி மக்கள் குடிநீர் வாரிய அதிகாரிகளுக்கு பலமுறை புகார் செய்தும் இதுவரை எந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லைஎனகூறப்படுகிறது. இதனையடுத்து அப்பகுதி மக்கள் நேரில் சென்று அதிகாரியிடம் கேட்டபோது அதற்கு அவர்கள் குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அதை சரி செய்து விரைவில் குடிநீர் வழங்கப்படும் என தெரிவித்துள்ளனர்.ஆனால் இதுவரை எந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.இதனால் ஆத்திரம் அடைந்தஅப்பகுதியைசேர்ந்தபெண்கள் 50க்கும் மேற்பட்டோர் நேற்று செம்மஞ்சேரியில் இருந்து எழில்முகநகர் செல்லும் பிரதான சாலையில் அமர்ந்து காலி குடங்களுடன் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் இங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.இது குறித்த பகுதி மக்கள் கூறுகையில்: கடந்த ஒரு வார காலமாக இப்பகுதியில் குடிநீர் இல்லாமல் பெரிதும் அவதிப்பட்டு வருகிறோம். சம்பந்தப்பட்ட அதிகாரம் சென்று புகார் தெரிவித்தால் உங்கள் பகுதிக்கு வரும் பகுதி ஏற்பட்டுள்ளது அதனை சரி செய்து சீரான குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கிறோம் எனக் கூறினர்.ஆனால் இதுவரை எந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை இதனால் நாங்கள் குடிநீர் இல்லாமல் பெரிதும் அவதிக்குள்ளாகி வருகின்றோம். சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுத்து சீரான குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## சென்னை ஓமந்தூரார் மெட்ரோ ரயில் நிலையத்திற்கு முதல்வர் விஜய் வருகை



சென்னை, ஜூலை 30
சென்னை ஓமந்தூரார் மெட்ரோ ரயில் நிலையத்திற்கு முதல்வர் விஜய் வந்துள்ளார். மெட்ரோ ரயிலில் நந்தனத்தில் உள்ள மெட்ரோ ரயில் தலைமை அலுவலகத்திற்கு செல்லும் அவர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துகிறார். பிறகு, கத்திப்பாரா சென்று 2ம் கட்ட வழித்தட பணிகளை பார்வையிடுகிறார்.




தேனி மாவட்டம் தேனிஅல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கான அரசு சேவைகள் மற்றும் நலத்திட்ட முகாமில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு அடையாள அட்டை பெறுவதற்கான ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன்பயனாளிக்கு வழங்கினார். உடன் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் க.சபரி ஐங்கரன் அவர்கள் உள்ளார்.

# அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை குறைவுக்கு காரணம் இதுதான்..! அமைச்சரை அதிர வைத்த தலைமை ஆசிரியர்கள்



சென்னை, ஜூலை 30

முதல்அமைச்சரின் அனுமதி பெற்று ஆசிரியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப் படும் என அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார்.

சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் அனைத்து ஆசிரியர் சங்கங்கள்மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர் சங்கங்களின் நிர்வாகிகளுடன் பள்ளிக்கல் வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் நேற்று கலந்துரையாடினார்.அப்போதுசங்கநிர்வாகிகள்தங்கள்கோரிக்கைகள் மற்றும் மாணவர் நலன் சார்ந்த கோரிக்கைகளை முன்வைத்தனர்.

அப்போது கழிப்பறைகள் சுத்தமாக இல்லாதது, அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை குறைவதற்கு முக்கிய காரணமாக உள்ளது என, பள்ளிக் கல்வித் துறை அமைச்சரிடம், மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சங்கம் சார்பில் புகார் தெரிவிக்கப்பட்டது.

அதனை கேட்டறிந்த பின்னர் அவர்கள் மத்தியில் அமைச்சர் ராஜ்மோகன் பேசியதாவது:

உலகில் பேசி தீர்க்க முடியாத பிரச்சினைகள் எதுவும் கிடையாது. இருமாநிலங்களுக்கு இடையேயான ஆறுகள் பிரச்சினைகள் ஆனாலும் சரி, நாடுகளுக்கு இடையே ஓடும் ஆறுகளின் பிரச்சினைகளாக இருந்தாலும் சரி தீர்க்க முடியாத பிரச்சினைகள்கூட பேசி தீர்த்து இருக்கிறார்கள். அந்தவகையில் நாமும் பிரச்சினைகளை பேசி அதற்கு தீர்வு காணப்போகிறோம்.


எது மக்களுக்கு நல்லது? எது மாணவர்களுக்கு நல்லது? எது பெற்றோருக்கு நல்லது? எது ஆசிரியர்களுக்கு நல்லது? என்பதை மட்டுமே இலக்காக கொண்டு பயணித்து வருகிறது நமது பள்ளிக்கல்வித்துறை. அப்படிப்பட்ட இத்துறையின் ஆணிவேராக இருப்பவர்கள் ஆசிரியர்கள். தமிழக முதல்அமைச்சரின்அனுமதி பெற்று ஆசிரியர்களின் என்னென்ன கோரிக்கைகளை நிறைவேற்ற முடியுமோ? அவற்றை எல்லாம் நிறைவேற்றுவேன். ஆசிரியர் சமுதாயத்துக்கு நல்லது செய்ய வேண்டும் என்பதுதான் எனது ஒரே இலக்கு. இதில் நடிப்புக்கோ, பாசாங்கு செய்வதற்கோ இடமே இல்லை. இவ்வாறு அவர் பேசினார். இதில் பள்ளிக்கல்வித்துறை கூடுதல் தலைமை செயலாளர் டாக்டர் பி.சந்திர மோகன், பள்ளிக்கல்வி இயக்குனர் எஸ். கண்ணப்பன், தொடக்கக்கல்வி இயக்குனர் நரேஷ், அரசு தேர்வுகள் இயக்குனர் சசிகலா உள்பட அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

இதில் பள்ளிக்கல்வித்துறை கூடுதல் தலைமை செயலாளர் டாக்டர் பி.சந்திர மோகன், பள்ளிக்கல்வி இயக்குனர்எஸ்.கண்ணப்பன்,தொடக்கக்கல்விஇயக்குனர் நரேஷ், அரசு தேர்வுகள் இயக்குனர் சசிகலா உள்பட அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

முன்னதாக அமைச்சருடனான கலந்துரையாடலில் பங்கேற்ற ஆசிரியர் சங்கங்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர். அதில் சில கோரிக்கைகள் வருமாறு:

பழைய ஓய்வூதியத்திட்டத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும், பணியில் இருக்கும் அனைத்துவகை ஆசிரியர்களுக்கும் தகுதித்தேர்வு தேவையில்லை என சட்டத்திருத்தத்தை நிறைவேற்ற வேண்டும், ஆசிரியர்களை கற்பித்தல் பணிகளை தவிர பிற பணிகளில் ஈடுபடுத்தக் கூடாது, எஸ்.எஸ்.எல்.சி. பொதுத்தேர்வு நேரத்தை 2.30 மணி நேரமாக மாற்ற வேண்டும், 1ம் வகுப்பு முதல் பிளஸ்2 வரையிலான அனைவருக்கும் தனியார் பள்ளிகளை போல் நேர்த்தியான வண்ணஉடைகளும், ஷூவும்வழங்கவேண்டும், தொடக்க கல்வித்துறையின் கீழ் இயங்கும் அனைத்து வகை பள்ளிகளிலும்மழலையர்கல்விவகுப்புகள்தொடங்கப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

# சிறுமிக்கு பாலியல் தொல்லை: பேக்கரி உரிமையாளர் போக்சோவில் கைது



தூத்துக்குடி, ஜூலை 30

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் 4 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த பேக்கரி உரிமையாளரை அனைத்து மகளிர்போலீசார்போக்சோசட்டத்தில்கைது செய்து சிறையில் அடைத்தனர்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி பேருந்து நிலையப் பகுதியைச் சேர்ந்தவர் குமார் (வயது 54). இவர் தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் சுப்பிரமணியபுரத்தில் கடந்த சில ஆண்டுகளாக 'ஐயங்கார் பேக்கரி' என்ற பெயரில் கடை நடத்தி வந்துள்ளார். இதற்காக அந்த பகுதியிலேயே வீடு எடுத்து வாடகைக்கு வசித்து வந்தார்.

இந்த நிலையில் வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்த 4 வயது சிறுமியைத் தனது வீட்டுக்குள் அழைத்துச் சென்று குமார் பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இதனை நேரில் கண்ட சிறுமியின் தாய், குமாரை தட்டிக்கேட்டு, விளாத்திகுளம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு தகவல் அளித்தார்.

இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த விளாத்திகுளம் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் தீவிர விசாரணைக்குப் பின் குமாரை போக்சோ சட்டத்தில் கைது செய்தனர். பின்னர் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# நிலவின் மீது மோத உள்ள பால்கன்9 ராக்கெட்: அச்சப்பட தேவையில்லை



கோவை, ஜூலை 30

அமெரிக்காவின் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான பால்கன்9 ரக ராக்கெட், நாசாவின் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து, கடந்த ஆண்டு ஜனவரி 15ந்தேதி 2 லேண்டர்களுடன் நிலவுக்கு புறப்பட்டு சென்றது. 2 லேண்டர்களும் நிலவை அடைந்து விட்டன. அதில், ஒரு லேண்டர் நிலவின் மீது மோதி விட்டது. 'புளு கோஸ்ட்' என்ற மற்றொரு லேண்டர் நிலவில் வெற்றியுடன் தரையிறங்கி உள்ளது.

2 வாரங்கள் செயல்பட்டு, நிலவில் சூரியன் மறையும் புகைப்படம் ஒன்றை எடுத்து அனுப்பியது. எனினும், நிலவில் சூரியன் மறைந்ததும் தன்னுடைய ஆற்றலை அது இழந்தது. இந்த நிலையில், லேண்டர்களை இறக்கி விட்ட அந்த ராக்கெட்டின் மேல் பகுதி, தன்னுடைய வேலையை முடித்து விட்டு பூமிக்கு திரும்ப வேண்டும். ஆனால், அது உயர்மட்ட சுற்று வட்டப்பாதையில் சிக்கிக்கொண்டது.

பூமிக்கு திரும்பாததால், ராக்கெட் என்ன ஆனது? என விஞ்ஞானிகள் ஆய்வுப் பணியில் ஈடுபட்டனர். இதுபோன்று 1,053 முறை கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டதில், பல முறை பூமி மற்றும் நிலவு ஆகியவற்றின் சுற்றுவட்டப்பாதைகளை அது கடந்து சென்றது கவனிக்கப்பட்டது. ஆனால், அதன் மீதும் மோதும் வகையில் நெருங்கி செல்லவில்லை.

இந்தவிண்கலப்பகுதிஎரிபொருள்தீர்ந்துகட்டுப்பாட்டை இழந்து நிலவை நோக்கி நகர்ந்து வருகிறது. இதனால் நிலவின் மேல்பரப்பில் இந்த மோதல் விரைவில் நடக்கப்போகிறதுஎனவிஞ்ஞானிகள்தெரிவித்துஉள்ளனர். இதுபற்றி, சுற்றுவட்டப்பாதைதொடர்பானவிஞ்ஞானிகள் ஆய்வு செய்து வந்தனர். அதன் பயணம் மற்றும் வருங்காலத்தில் அதற்கு என்ன நடக்கும்? என்பது பற்றி கணித்துள்ளனர்.

அதன்படி, வருகிற 5ந்தேதி மதியம் 1.14 மணியளவில் அது நிலவில் உள்ள ஐன்ஸ்டீன் பள்ளம் அருகில் மோதக்கூடும். அப்போது மணிக்கு 8 ஆயிரத்து 700 கி.மீ. அல்லது ஒலியின் 7 மடங்கு வேகத்தில் அது இயங்கும் என விஞ்ஞானிகள் தெரி வித்துள்ளனர். இதனால், யாரும் அச்சப்பட தேவையில்லை.

விண்வெளியில் இதுபோன்ற குப்பைகள் சேராமல் அதனை கவனத்துடன் அகற்றுவது பற்றிய தேவையை உணர்த்தியுள்ளது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அந்த ராக்கெட்டின்மேல் பகுதி, இதுவரை 26 நாட்களில் பூமியை ஒரு முறை சுற்றி வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# வரவிருக்கும் சம்பா சாகுபடிக்காவது உடனடியாகத் தண்ணீர் வந்தாக வேண்டும்! மாணிக்கம் தாகூர்



சென்னை, ஜூலை 30

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாணிக்கம் தாகூர் எம்.பி. வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

தமிழ்நாட்டின் குறுவை விவசாயம் ஏற்கனவே காய்ந்துவிட்டது, வரவிருக்கும் சம்பா சாகுபடிக்காவது உடனடியாகத் தண்ணீர் வந்தாக வேண்டும்!

CWRCஅமைப்பின்உத்தரவை ஏற்க மறுத்து மேல்முறையீடு செய்வோம் என்றும், தண்ணீர் திறக்க முடியாது என்றும் கர்நாடக மந்திரி ராமலிங்க ரெட்டி பேசுவது தேவையற்ற பதற்றத்தையும் மாநிலங்களுக்கு இடையே விரிசலையும் மட்டுமே உண்டாக்கும். இத்தகைய பொறுப்பற்ற கருத்துக்களைக் கடுமையாகக் கண்டிக்கிறேன்.

29.07.2026 முதல் 15 நாட்களுக்குப் பிலிகுண்டுலுவில் தினமும் 3,500 கனஅடி நீரைத் திறக்க வேண்டும் என்ற CWRC உத்தரவைக் கர்நாடகா எவ்விதச் சாக்குப்போக்கும் இன்றி உடனடியாகச் செயல்படுத்த வேண்டும்!

26.07.2026 வரை பிலிகுண்டுலுவில் வழக்கமாக வரவேண்டிய 35.391 டிஎம்சிக்கு பதிலாக வெறும் 3.543 டிஎம்சி (10.01%) மட்டுமே கிடைத்துள்ளது. இதனால் தமிழ்நாட்டிற்கு 9.46 டிஎம்சி நீர் பாக்கி உள்ள நிலையில், சட்டப்பூர்வ தீர்ப்புகளையும் உத்தரவுகளையும் மதித்து நடப்பதே கூட்டாட்சி தர்மத்திற்கு அழகு.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அம்பத்தூரில் ரூ.1,000 செலுத்திய வீட்டுக்கு ரூ.14 ஆயிரம் மின் கட்டணமா? மக்கள் கொந்தளிப்பு

சென்னை, ஜூளை 30

சென்னை அம்பத்தூர், கள்ளிக்குப்பம் பகுதியை சேர்ந்தவர் ஆசீர்வாதம் (வயது 38). இவர் மளிகை கடை நடத்தி வருகிறார். இவருக்கு மாதனாங்குப்பம் பிரதான சாலை, தீப்பாச்சியம்மன் நகரிலும் ஒரு வீடு உள்ளது. அந்த வீட்டிற்கான மின் கட்டணமாக ரூ.14 ஆயிரத்து 264 செலுத்த வேண்டும் என ஆசீர்வாதத்தின் தொலைபேசிக்கு குறுஞ்செய்தி வந்தது.

இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த ஆசீர்வாதம், புழல் மின்வாரிய அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு விசாரித்தார். அப்போது அது 'பெண்டிங்' தொகை என மின்வாரிய தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இது குறித்து ஆசீர்வாதம் கூறும்போது, 'ஒவ்வொரு முறையும் மின்வாரிய ஊழியர்கள் கணக்கீடு செய்து கூறும் தொகையை தவறாமல் செலுத்தி வருகிறேன். கடந்த முறை வரை ரூ.1,000க்கும் குறைவாகவே மின்கட்டணம் செலுத்திய நிலையில், இந்த முறை திடீரென ரூ.14 ஆயிரத்து 264 செலுத்த வேண்டும் என்கிறார்கள்.

இதேபோல், எனது வீட்டின் அருகில் உள்ள மற்ற வீடுகளிலும் ரூ.15 ஆயிரம் முதல் ரூ.18 ஆயிரம் வரை 'பெண்டிங்' தொகை செலுத்த வேண்டும் என மின்வாரிய அதிகாரிகள் கூறுகின்றனர். மின்வாரிய ஊழியர்கள் முறையாக மீட்டர்கணக்கீட்டை செய்யவில்லை. திடீரென இவ்வளவு பெரிய தொகை வந்தால் நாங்கள் எங்கு செல்வது? என கேள்வி எழுப்பினார்.

இதைபோல கொளத்தூர் அடுத்த செக்ரட்டரி காலனியிலும் பல வீடுகளுக்கு வழக்கத்திற்கு மாறாக கூடுதல் மின்கட்டணம் வந்ததாக கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த அப்பகுதி வீட்டு உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் கொளத்தூர் மின்வாரிய அலுவலகத்திற்கு சென்று அதிகாரிகளிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு சிறிது நேரம் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# 4 வயது சிறுமியை பாலியல் தாக்குதல் செய்த முதியவருக்கு சாகும்வரை ஆயுள் தண்டனை



திருநெல்வேலி, ஜூலை 30

திருநெல்வேலி மாவட்ட காவல்துறையின் விரைவான விசாரணை மூலம் 4 மாதங்களிலேயே, மாவட்டத்தில் 4 வயது சிறுமியை பாலியல் தாக்குதல் செய்த வழக்கில் முதியவருக்கு சாகும்வரை ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டு உள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த 16.3.2026 அன்று கணபதி (வயது 81) என்பவர் 4 வயது சிறுமியிடம் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டுள்ளார். இதுகுறித்து பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய், சுத்தமல்லி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். பின்னர் இந்த வழக்கு மேல்நடவடிக்கைக்காக சேரன்மகாதேவி அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டு, அங்கு தொடர்ந்து புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.அதன்பேரில்போக்சோசட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு, சேரன்மகாதேவி அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டர் மங்கையர்க்கரசி, தீவிர புலன் விசாரணை மேற்கொண்டு மேற்சொன்ன முதியவரை கைது செய்தார்.

புலன் விசாரணையின் முடிவில் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்து வழக்கின் விசாரணையானது, திருநெல்வேலி மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், மேற்சொன்ன முதியவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு, நீதிபதி சுரேஷ்குமார் நேற்று (28.7.2026) குற்றவாளிக்கு சாகும் வரை ஆயுள் தண்டனையும், ரூ.10 ஆயிரம் அபராதமும் விதிக்கப்பட்டது. மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ.3 லட்சம் நிவாரணத்தொகை வழங்க உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

இந்த வழக்கின் நீதிமன்ற விசாரணை நடைபெற, சிறப்பாக கண்காணிப்பு செய்த ஏ.டி.எஸ்.பி. சண்முகம் (CWC), சேரன்மகாதேவி உட்கோட்ட டி.எஸ்.பி. அஸ்வத் அன்டோ ஆரோக்கியராஜ், சேரன்மகாதேவி மகளிர் காவல் நிலையஇன்ஸ்பெக்டர்விஜயலெட்சுமிமற்றும்வழக்கினை திறம்பட புலன் விசாரணை செய்த அப்போதைய சேரன்மகாதேவி மகளிர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் மங்கையர்கரசி (தற்போது தூத்துக்குடி மாவட்டம்), வழக்கின் விசாரணைக்கு உதவியாக இருந்த ஏட்டு துர்காதேவி, குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தர திறம்பட வாதிட்ட அரசு வழக்கறிஞர் உஷா ஆகியோரை திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. விஷ்வேஷ் பா.சாஸ்திரி பாராட்டினார்.

திருநெல்வேலி மாவட்ட காவல்துறையினரின் தீவிர நடவடிக்கையால் இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 15 போக்சோ வழக்குகளில் ஈடுபட்ட 15 குற்றவாளிகளுக்கு தண்டனைபெற்றுதரப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடத்தக்க வகையில் 1 குற்றவாளிக்கு மரண தண்டனையும், 4 குற்றவாளிகளுக்கு சாகும் வரை ஆயுள் தண்டனையும், 2 குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனையும், 1 குற்றவாளிக்கு 25ஆண்டுகள்சிறைதண்டனையும்பெற்றுதரப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்ட காவல் துறையானது பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதோடு, அவர்களுக்கெதிராக குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகள் மீது தனிப்பட்ட கவனத்துடன் தீவிரமான மற்றும் தொடர்ச்சியான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என மாவட்ட எஸ்.பி. தெரிவித்துள்ளார்.

# கொலை வழக்கு குற்றவாளிகள் 2 பேருக்கு இரட்டை ஆயுள் தண்டனை

தூத்துக்குடி, ஜூலை 30

தூத்துக்குடி மாவட்டம், நாலாட்டின்புதூர்காவல்நிலைய கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட 2 குற்றவாளிகளுக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதித்து PCR நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், நாலாட்டின்புதூர்காவல்நிலைய எல்லைக்குட்பட்ட செண்பகப்பேரி பகுதியைச் சேர்ந்த பாண்டியராஜ் (வயது 25) என்பவரை முன்விரோதம் காரணமாக கொலை செய்த வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளான அதே பகுதியைச் சேர்ந்த செல்லத்துரை மகன் சதீஷ்(26) மற்றும் பாலமுருகன் மகன் மதன்(24) ஆகிய 2 பேரையும் நாலாட்டின்புதூர் காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த வழக்கு தூத்துக்குடி மாவட்ட PCR (Protection of Civil Rights Act குடியுரிமை பாதுகாப்புச் சட்டம்) நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்த நிலையில், நீதிபதி வசீத்குமார் நேற்று (28.7.2026) சதீஷ், மதன் ஆகிய



2 பேரும் குற்றவாளிகள் என உறுதி செய்து அவர்களுக்கு தலா இரட்டை ஆயுள் தண்டனை மற்றும் தலா ரூ.20 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

# சேலம்: லாரி-சரக்கு வாகனம் மோதல்; டிரைவர் பலி 20 பேர் படுகாயம்

சேலம், ஜூலை 30

சேலம் மாவட்டம் மேச்சேரி அருகே நேற்று இரவு நிகழ்ந்த சாலை விபத்தில் லாரி டிரைவர் உயிரிழந்தார். மேலும், அரசு பஸ்சில் பயணம் செய்த 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

மேட்டூரில் இருந்து அரசு பஸ் நேற்று இரவு சுமார் 10 மணியளவில் மேச்சேரி அருகே உள்ள எம்.காளிப்பட்டி பகுதியில் சென்று கொண்டிருந்தது. அப்போது, பஸ்சின் பின்னால் வந்த சரக்கு வாகனம் அரசு பஸ்சை முந்திச் செல்ல முயன்றது. அந்த நேரத்தில் எதிரே வந்த லாரியுடன் சரக்கு வாகனம் நேருக்கு நேர் மோதியது. மோதிய வேகத்தில் சரக்கு வாகனம் கட்டுப்பாட்டை இழந்து அரசு பஸ்சின் மீதும் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் லாரி, சரக்கு வாகனம் மற்றும் அரசு பஸ் ஆகியவை கடுமையாக சேதமடைந்தன. லாரி டிரைவர், கிளீனர், சரக்கு வாகன டிரைவர் மற்றும் அரசு பஸ்சில் பயணம் செய்த 20க்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்தனர்.

விபத்து குறித்து தகவல் அறிந்த மேச்சேரி போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். காயமடைந்தவர்கள் தனியார் ஆம்புலன்ஸ்கள் மூலம் மேச்சேரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த லாரி டிரைவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மற்ற காயமடைந்தவர்களுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த விபத்தால் மேச்சேரிமேட்டூர் சாலையில் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பின்னர் போலீசார் சேதமடைந்த வாகனங்களை அகற்றி போக்குவரத்தை சீரமைத்தனர். விபத்து தொடர்பாக மேச்சேரிபோலீசார்வழக்குப்பதிவுசெய்துதீவிரவிசாரணை நடத்தி வருகின்றனர்.

# வாக்குப்பதிவு இயந்திரத்தின் நம்பக தன்மையை பரிசோதிக்கவே ஆய்வு நடைபெறுகிறது என சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரியும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருமான சமீரன் பேட்டி

சென்னை, ஜூலை 30

சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் கொளத்தூர் தொகுதியில் பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வரும் விவராகரம் குறித்து, சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரியும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருமான சமீரன் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது பேசிய அவர்,

தேர்தல் ஆணையத்தின் ஆணைக்கிணங்க தேர்தல் வாக்குப்பதிவு இயந்திரங்கள் சரிபார்க்கப்பட்டு வருகிறது, கொளத்தூர் தொகுதியை தொடர்ந்து பிற மாவட்டங்களான காஞ்சிபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டத்துக்குப்பட்ட இயந்திரங்கள்அந்தஅந்தமாவட்டத்தில்ஆய்வுசெய்யப்பட உள்ளது.

வேட்பாளர் தேர்வு செய்துகொடுத்த 14 வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தப்பட்ட இயந்திரங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருவதாகவும் வேட்பாளரின் தலைமை முகவர் முன்னிலையில் பெல் நிறுவன பொறியாளர்கள் முன்னிலையில் ஆய்வு தொடங்கி நடைபெறுகிறது என்ற அவர் ஏற்கனவே அந்த இயந்திரத்தில் பதிவான வாக்குகள் முதலில் காண்பிக்கப்படும் என்றும் அதன் பின்னர் பதிவான வாக்குகள் முழுமையாக அழித்துவிட்டு மீண்டும் மாதிரி வாக்குப்பதிவு நடத்தப்படும் இயந்திரத்தின் நம்பக



தன்மையை பரிசோதிக்கவே இந்த நடைமுறை என்றார்.

மேலும் பேசிய அவர் முதலில் இரண்டு வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தப்பட்ட இயந்திரங்கள் இன்று ஆய்வு மேற்கொள்ளப்படும் என்றும் மாதிரி வாக்குப்பதிவில் குறைந்தது 500 முதல் அதிகபட்சம் 1400 வாக்குகள் செலுத்தலாம் என கூறிய அவர் வெவ்வேறு பகுதிகளில் உள்ள 14 வாக்குச்சாவடிகள் தான் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளதாகவும் சென்னையில் முதல் முறையாக இந்த சரி பார்ப்பு பணி நடைபெறுகிறது என கூறினார்.

# பெண் ஊழியர்களுக்கு ஊதியத்துடன் மாதவிடாய் விடுமுறை எப்போது? முடிவெடுக்க 2 வாரம் அவகாசம் கோரும் அரசு



மதுரை ஜூலை 30

மதுரையை சேர்ந்த நர்மதா, ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில் அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கு மாதவிடாய் காலத்தில் ஊதியத்துடன் விடுமுறையை வழங்க உரிய வழிகாட்டு நெறிமுறைகளை அரசு வெளியிடுமாறு உத்தரவிட வேண்டும் என கோரியிருந்தார்.

இந்த மனு ஏற்கனவே விசாரணைக்கு வந்த போது, மனுதாரரின் கோரிக்கையை அமல்படுத்துவது தொடர்பாக அரசு ஆலோசனை செய்து உரிய நடவடிக்கை எடுக்க நீதிபதிகள் உத்தரவிட்டிருந்தனர். இந்நிலையில் இந்த மனு நேற்று மீண்டும் நீதிபதிகள் சி.வி.கார்த்திகேயன், சக்திவேல் ஆகியோர் முன் விசாரணைக்கு வந்தது. மனுதாரர் வழக்கறிஞர் மோதர்ஷினி ஆஜராகி, மாதவிடாய் காலங்களில் பெண்களுக்கு ஊதியத்துடன் விடுமுறை அளிப்பது தொடர்பாக விதிகளை உருவாக்க அரசு சிறப்பு குழு அமைக்க வேண்டும் என்றார்.

அரசு தரப்பில், இதுதொடர்பாக அரசுடன் ஆலோசனைநடத்தி பதிலளிக்க 2 வாரகால அவகாசம் தேவை என கூறப்பட்டது. இதையடுத்து நீதிபதிகள், சிறப்பு குழு அமைத்தால் அதில் யார், யார் இடம் பெறுவார்கள் என்பது குறித்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை ஆக.24க்குதள்ளி வைத்தனர்.

# தவெகவில் இணைய ஓ.பன்னீர்செல்வம் முடிவு: விரைவில் எம்.எல்.ஏ. பதவி ராஜினாமா



சென்னை, ஜூலை 30

த.வெ.க.வில் இணைய ஓ.பன்னீர்செல்வம் முடிவு செய்திருப்பதாக தெரிகிறது.

தமிழக முன்னாள் முதல்அமைச்சரும், முன்னாள் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளருமான ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமியுடன் ஏற்பட்ட மோதலால் கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டார். அ.தி.மு.க.வை விட்டு வெளியேறிய நிலையில், கே.ஏ.செங்கோட்டையன் வழியில் அவரும் த.வெ.க.வில் சென்று இணைவார்என்று பரபரப்பாக பேசப்பட்டது. அவருடைய மகன் ரவீந்திரநாத்தின் விருப்பமும் அதுவாகத்தான் இருந்தது.

ஆனால், சட்டசபை தேர்தலுக்கு முன்பு தமிழகத்தில் ஆளுங்கட்சியாக இருந்த தி.மு.க., ஓ.பன்னீர்செல்வத்தை தங்கள் பக்கம் இழுத்தது. சட்டசபை தேர்தலிலும் யாரும் எதிர்பார்க்காத வகையில், த.வெ.க. ஆட்சி அமைத்ததால், தி.மு.க. எதிர்க்கட்சி வரிசையில் அமர வேண்டியதாகிவிட்டது. தி.மு.க.வில் கடந்த பிப்ரவரி மாதமே ஓ.பன்னீர்செல்வம்இணைந்தநிலையில், இதுவரைஅவருக்கு எந்த பதவியும் வழங்கப்படவில்லை. தேர்தலில் தி.மு.க.வும் தோல்வி அடைந்தால், அடுத்து என்ன செய்வது என்று ஓ.பன்னீர்செல்வம் யோசித்து வருகிறார்.

இந்த நிலையில், தற்போதுள்ள தமிழக அரசியல் சூழ்நிலையில், த.வெ.க.வில் சென்று இணைவதே சிறப்பு என்று ரவீந்திரநாத் தனது தந்தை ஓ.பன்னீர்செல்வத்திடம் கூறியதாக தகவல் வெளியாகியுள்ளது. அதற்கு ஓ.பன்னீர்செல்வமும் பச்சைக்கொடி காட்டிவிட்டதாக கூறப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து, அடுத்தக்கட்ட நடவடிக்கையாக, த.வெ.க. பொதுச் செயலாளரும், அமைச்சருமான புஸ்ஸி ஆனந்த், அமைச்சர் ஆதவ் அர்ஜூனா ஆகியோரிடம் ரவீந்திரநாத் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளதாக தெரிகிறது.

அமைச்சர்கள் இருவரும் ஓ.பன்னீர்செல்வத்தின் விருப்பத்தை முதல்அமைச்சர் ஜோசப் விஜய்யிடம் கூற, அவரும் அதற்கு சம்மதம் தெரிவித்துவிட்டதாக கூறப்படுகிறது. தற்போதைய நிலையில், தென்மாவட்டங்களில்தான் த.வெ.க. வலுகுறைந்து காணப்படுகிறது. அதற்கு, முக்கிய அரசியல் முகம் அங்கு இல்லை என்று சொல்லப்படுகிறது. எனவே, அந்தக் குறையை ஓ.பன்னீர்செல்வம் மூலம் தீர்த்துக்கொள்வதுடன், கட்சியையும்வலுப்படுத்தமுடியும் என்று த.வெ.க. தலைமை கருதுகிறது.

முன்னாள் முதல்அமைச்சராக ஓ.பன்னீர்செல்வம் இருந்ததால், த.வெ.க.வில் அவருக்கு முக்கிய பொறுப்பு வழங்கவும் முதல்அமைச்சர் ஜோசப் விஜய் முடிவு செய்திருப்பதாக கூறப்படுகிறது.

விரைவில், தனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டுத.வெ.க.வில்ஓ.பன்னீர்செல்வம்இணைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இடைத்தேர்தலில் அதே தொகுதியில் த.வெ.க. சார்பில் மீண்டும் போட்டியிட ஓ.பன்னீர்செல்வம் திட்டமிட்டுள்ளார்.

2029ம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தேனி நாடாளுமன்ற தொகுதியில் ஓ.பன்னீர்செல்வத்தின் மகன் ரவீந்திரநாத் த.வெ.க. சார்பில் களம் இறக்கப்படுவார் என்றும் கூறப்படுகிறது

# சிறிய நகரங்களில் மெட்ரோ திட்டத்துக்கு அனுமதித்தது எப்படி? ரெயில்வே தொழிற்சங்கம் கேள்வி



மதுரை, ஜூலை 30

வடமாநிலங்களில் 20 லட்சத்துக்கும் குறைவான மக்கள் தொகையை கொண்ட நகரங்களில் மெட்ரோ ரெயில் திட்டத்துக்கு அனுமதி அளித்துள்ளது எந்த அடிப்படையில் என்று டி.ஆர்.பி.யூ. தொழிற்சங்கம் கேள்வி எழுப்பியது.

மதுரை, கோவை மெட்ரோ ரெயில் திட்டம் மக்கள் தொகை குறைவாக இருப்பதாக கூறி மத்திய அரசால் நிராகரிக்கப்பட்டது. அதற்கு பதிலாக பஸ் போக்குவரத்தை மேம்படுத்தவும் அறிவுறுத்தியது. இதற்கு பல்வேறு தரப்பில் இருந்தும் கடும் கண்டனம் எழுந்துள்ளது.

அதாவது, திருமங்கலம்ஒத்தக்கடை இடையே 31 கி.மீ. தூர மெட்ரோ ரெயில் பாதை பணிக்கு ரூ.11,360 கோடி திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் வீட்டுவசதி, நகர்ப்புற விவகாரத்துறை அமைச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதற்காக மதுரை மெட்ரோ ரெயில் திட்டத்துக்கான விரிவான ஆய்வறிக்கையை தமிழக அரசின் சென்னை மெட்ரோ ரெயில் கார்ப்பரேசன் நிறுவனம் மத்திய அரசிடம் வழங்கியது. ஆனால் மக்கள் தொகை குறைவாக இருப்பதால் தமிழக அரசு இது குறித்து பரிசீலனை செய்ய வேண்டும் என்ற மத்திய அரசு தெரிவித்து இருந்தது. இதற்கிடையே, மீண்டும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. தற்போது மீண்டும் நிராகரித்துள்ளது.

இது குறித்து டி.ஆர்.பி.யூ. தொழிற்சங்கத்தின் பொது செயலாளர் சங்கரநாராயணன் வெளியிட்டுள்ள அறிக்கையில், மதுரை, கோவை மெட்ரோ ரெயில் திட்டத்தை மக்கள் தொகையை காரணமாக காட்டி மத்திய அரசு 2வது முறையாக நிராகரித்துள்ளது. இது தமிழகத்துக்கு இழைக்கும் அநீதி ஆகும். தொழில்நுட்பரீதியாக காரணங்களை சொல்லாமல், 2011ம் ஆண்டு மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து திட்டத்தை மறுப்பது ஏற்கத்தக்கது இல்லை.

மதுரையின் தற்போதைய மக்கள் தொகை சுமார் 20 லட்சத்தை தாண்டியுள்ளது. மெட்ரோ திட்டத்தை தொடங்கி முடிக்கும் போது இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. மெட்ரோ ரெயில் திட்டம் என்பது மக்கள் தொகையை கொண்டு முடிவு செய்யும் திட்டம் இல்லை.

ஒரு நகரின் எதிர்கால கட்டமைப்பு வளர்ச்சி, தொழில்துறை முன்னேற்றம், நகர்ப்புற விரிவாக்கம், மக்கள் தொகை உயர்வு மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகிய அனைத்து அம்சங்களையும் கொண்டது. தென்தமிழகத்தின் நுழைவுவாயிலாக உள்ள மதுரைக்கு மெட்ரோ திட்டம் கட்டாயமாகும்.

ஆனால், உத்தரபிரதேசத்தின் கான்பூர், மத்திய பிரதேசத்தின் இந்தூர், மகாராஷ்டிராவின் நாக்பூர் மற்றும் ஒடிசாவின் புவனேசுவர் ஆகிய நகரங்களில் 20 லட்சத்துக்கும் குறைவான மக்கள் தொகை உள்ளது. எந்த அடிப்படையில் அங்கு மட்டும் மெட்ரோ திட்டம் அனுமதிக்கப்பட்டது.

அத்துடன் மெட்ரோவுக்கு பதிலாக பி.ஆர்.டி.எஸ். எனப்படும் பஸ் போக்குவரத்து திட்டத்தை பரிந்துரைத்தது. அதற்கானசாலைகட்டமைப்புவசதிகள் மதுரையில் இல்லை. எனவே மெட்ரோ திட்டத்துக்கு ஒப்புதல்வழங்கவேண்டும்எனஅதில்கூறப்பட்டுள்ளது.

# டாஸ்மாக் முறைகேடு தொடர்பாக தமிழகம் முழுவதும் 41 இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை




சென்னை, ஜூலை 30

தமிழ்நாட்டில் தற்போது 4,048 பதிவு செய்யப்பட்ட டாஸ்மாக் விற்பனை நிலையங்கள் உள்ளன. அதில் ஒவ்வொரு மாதமும் சுமார் ரூ.102 கோடி அளவுக்கு முறைசாரா வழிகள் மூலம் டாஸ்மாக் வருவாய் கட்சி நிதி என்ற பெயரில் திசை திருப்பப்பட்டு வந்ததுடன், கடந்த ஐந்து ஆண்டுகளில் இதன் மூலம் மாநில அரசுக்கு ஏற்பட்ட இழப்புகள் ரூ.3,600 கோடியை தொட்டிருக்கும் என மதிப்பிடப்பட்டது.

இது குறித்து மூத்த அரசு அதிகாரிகள் தமிழக முதல் அமைச்சர் விஜய்யிடம் கூறியதையடுத்து, புதிய அரசு டாஸ்மாக் வருவாயில் வெளிப்படைத்தன்மையுடைய செயல்பாட்டை தொடங்க உத்தரவிட்டது. மேலும், காலி மதுபாட்டில்களை திரும்பப் பெறும் முறையை மறுஆய்வு செய்யவும் முடிவு செய்யப்பட்டது.

இதனிடையே தமிழக அரசின் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில், பள்ளி, கல்லூரிகள், மக்கள் அதிகம் கூடும் இடங்களில் இயங்கி வந்த 717 மதுபான விற்பனை நிலையங்களை தமிழக அரசு மூடியிருக்கிறது. டாஸ்மாக் மதுக்கடைகள் மூலம் வரும் ஒவ்வொரு ரூபாய் வருவாயும் முறையாக அரசின் கருவூலத்துக்கு வந்து சேருவதை உறுதி செய்யவும் அதிகாரிகளுக்கு முதல் அமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தமிழ்நாட்டில் இயங்கும் டாஸ்மாக்கின் மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள் முழுவதும் நீண்ட காலமாக இயங்கி வரும் அதிகாரப்பூர்வமற்ற பண வசூல் அமைப்புகளை கலைத்துவிடவும் அதிகாரிகளுக்கு முதல் அமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில்டாஸ்மாக்முறைகேடுதொடர்பாக தமிழ்நாடு முழுவதும் 41 இடங்களில்லஞ்சஒழிப்புத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். இதன்படி ஈரோடு, கோவை (பீளமேடு), பொள்ளாச்சி, நரசிம்மநாயக்கன் பாளையம், நவகரையில் உள்ள கிடங்குகளில் சோதனை நடத்தப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேட்டுப்பாளையம் நரசிம்ம நாயக்கன்பாளையத்தில் சிவாஸ்மதுபானதயாரிப்பு ஆலை மற்றும் மன்னார்குடியில் உள்ள டி.ஆர்.பாலுவுக்கு சொந்தமான மதுபான ஆலையிலும் லஞ்ச ஒழிப்புத்துறையினர் சோதனை நடத்தி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

சிவகங்கை மாவட்டம் தொண்டி சாலையில் உள்ள டாஸ்மாக் குடோனில், ராமநாதபுரம் லஞ்ச ஒழிப்பு துறை டி.எஸ்.பி. ராமச்சந்திரன்தலைமையிலான போலீசார் திடீர் சோதனை நடத்தி வருகின்றனர். இந்த சோதனையில் கணக்கில் வராத லட்சக்கணக்கான பணம் கைப்பற்றப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

# மாணவர்களை மிரட்டும் வகையில் பேச்சு: சிங்கப்பெண் அதிரடிப்படை சப்இன்ஸ்பெக்டர் மாற்றம்




அரியலூர், ஜூலை 30

தமிழகமுதல்அமைச்சர்விஜய்அறிவித்ததிட்டங்களில், பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளை பாதுகாக்கும் வகையில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை திட்டமும் ஒன்றாகும். அனைத்து மாவட்டங்களிலும் இந்த திட்டம் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, அரியலூர் மாவட்டத்தில் உள்ள அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் உட்கோட்டங்களில் தலா 4 போலீசார்கொண்ட2சிங்கப்பெண்சிறப்புஅதிரடிப்படை அமைக்கப்பட்டது. இதில் அரியலூர் உட்கோட்ட படையில் சிறப்பு பாதுகாப்பு அலுவலராக பணியாற்றிய சப்இன்ஸ்பெக்டர் சுமதி, கடந்த சில நாட்களுக்கு முன்பு அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசினார்.

அப்போது அங்குள்ள மாணவர்களிடம் '18 வயதுக்கு உட்பட்ட பெண் குழந் தைகளிடம் யார் பேசினாலும், ஹாய் என குறுஞ்செய்தி அனுப்பினாலோ அல்லது அவர்களிடம் அசிங்கமாகவோ, அருவருப்பாகவோ பேசினால் போக்சோ சட்டத்தின்கீழ் சிறைக்கு செல்வீர்கள்' என்று மாணவர்களை மிரட்டும் வகையில் அவர் பேசியதாக தெரிகிறது. மேலும் இதனை அவரே வீடியோவாக எடுத்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அதனை பார்த்த பொதுமக்கள் பலரும், '18 வயதுக்கு கீழ் உள்ள பெண் குழந்தைகளிடம் பேசினாலே சிறைக்கு செல்வீர்' என பேசியது தவறு என்று சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளனர். இந்த வீடியோ தற்போது வைரலான நிலையில், சுமதியை அரியலூர்சட்டம்ஒழுங்கு போலீஸ் பிரிவுக்குமாற்றம்செய்துமாவட்ட போலீஸ்சூப்பிரண்டு செல்வகுமார் உத்தரவிட்டார்.

# கோவையில் ரூ.3 கோடி தங்கம் மோசடி: நகைக்கடை உரிமையாளர் கைது




கோவை, ஜூலை 30

கோவையில் ரூ.3 கோடி தங்கம் மோசடி தொடர்பாக மதுரையைச் சேர்ந்த நகைக்கடை உரிமையாளரை போலீசார் கைது செய்தனர்.

கோவை ராஜவீதி அசோக்நகரை சேர்ந்த ஆனந்தன் நகை பட்டறை நடத்தி வருகிறார். இவருக்கு மதுரையில் நகைக்கடை நடத்தி வரும் சுதர்சன் என்பவருடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது. தங்கநகைகளைக் கொடுத்தால் 20 நாட்களில் விற்று பணமாகத் தருவதாக சுதர்சன் உறுதியளித்துள்ளார். இதனையடுத்து ரூ.3 கோடி மதிப்புள்ள தங்க நகைகளை ஆனந்தன் அவரிடம் வழங்கியுள்ளார்.

ஆனால்அதற்குரியபணத்தைக்கொடுக்காமல்சுதர்சன் ஏமாற்றி வந்துள்ளார். இதுகுறித்து ஆனந்தன் அளித்த புகாரின் பேரில், கோவை நகர மத்திய குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்து சுதர்சனை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# எழும்பூர் ரெயில் நிலையத்தில் 13 கிலோ கஞ்சா பறிமுதல்: 2 பேர் கைது



சென்னை, ஜூலை 30

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் 13 கிலோ கஞ்சா பறிமுதல் செய்தது தொடர்பாக ரெயில்வே போலீசார் 2 வடமாநிலத்து நபர்களை கைது செய்துள்ளனர்.

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்துக்கு நேற்று, ஹவுராவிலிருந்து ஒரு எக்ஸ்பிரஸ் ரெயில் வந்தது. அதில் இருந்து பயணிகள் ஒருவர் பின் ஒருவராக இறங்கி சென்றனர். அப்போது சந்தேகத்திற்கு இடமான வகையில் 2 பேர் நடந்து சென்றனர். அவர்களை பிடித்து ரெயில்வே பாதுகாப்பு சிறப்புப் பிரிவினர் விசாரணை செய்தபோது முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்தனர்.

இதையடுத்து, அவர்கள் வைத்திருந்த பையை சோதனை செய்ததில் 13 கிலோ கஞ்சாவை கடத்தி வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. விசாரணையில் அவர்கள் ஒடிசா மாநிலத்தை சேர்ந்த மனோஜ்லென்கா (வயது 37), பூர்ணசந்திரா(35) என்பதும், ஒடிசாவில் இருந்து கஞ்சாவை வாங்கி சென்னையில் உள்ளவரிடம் கொடுப்பதற்காக கடத்தி வந்ததும் தெரியவந்தது. அவர்களிடம் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சாத்தான்குளத்தில் அரசு பேருந்து ஓட்டுநர் மீது தாக்குதல்: வாலிபர் கைது

தூத்துக்குடி, ஜூலை 30

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளத்தில் அரசு பேருந்தை வழிமறித்து ஓட்டுநரைத் தாக்கிய வாலிபரை போலீசார் கைது செய்தனர்.

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் இருந்து திருச்செந்தூருக்கு சென்ற அரசு பேருந்தை, கன்னியாகுமரியைச் சேர்ந்த ரவி என்பவர் ஓட்டிச் சென்றுள்ளார். பேருந்தின் நடத்துநராக ஜெயகோபி என்பவர் பணியில் இருந்துள்ளார். இப்பேருந்து சாத்தான்குளம் பழைய பேருந்து நிலையம் அருகே நேற்று முன்தினம் இரவு சென்றபோது, சாத்தான்குளம் மாதா கோவில் தெருவைச் சேர்ந்த சின்னத்துரை (வயது 31) என்பவர் மீது மோதுவது போல் சென்றதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக ஓட்டுநருக்கும், சின்னத்துரைக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. ஆத்திரமடைந்த சின்னத்துரை, அரசு பேருந்தை வழிமறித்து ஓட்டுநர் ரவியை தாக்கியுள்ளார். இதில் காயமடைந்தஓட்டுநர்ரவி, சிகிச்சைக்காகசாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இச்சம்பவம் குறித்த புகாரின் பேரில், சாத்தான்குளம் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் சிவராஜா வழக்குப்பதிவு செய்து, ஓட்டுநரைத் தாக்கிய சின்னத்துரையை கைது செய்தார்.

# கொளத்தூரில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களை சரிபார்க்கும் பணி தொடங்கியது



சென்னை, ஜூலை 30

சட்டமன்ற தேர்தல்களில் சென்னை கொளத்தூர் தொகுதியில் (2011, 2016, 2021) 'ஹாட்ரிக்' வெற்றியை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் பதிவு செய்திருந்தார். ஆனால் சமீபத்தில் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் 8,795 வாக்குகள் வித்தியாசத்தில் த.வெ.க. வேட்பாளர் வி.எஸ்.பாபுவிடம் தோல்வி அடைந்தார்.

இந்த நிலையில் கொளத்தூர் தொகுதிக்குட்பட்ட 14 வாக்குச்சாவடிகளில் மின்னணு வாக்கு எந்திரங்களை ஆய்வு செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையத்தில் மு.க.ஸ்டாலின் சார்பில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் கொளத்தூர் தொகுதியின் 14 வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களை சரிபார்க்கும் பணி தொடங்கியுள்ளது. தி.மு.க. முகவர்கள், தேர்தல் நடத்தும் அதிகாரி முன்னிலையில் எந்திரங்கள் சரிபார்க்கப்பட்டு வருகிறது. இன்று முதல் 7 நாட்களுக்கு இப்பணி நடைபெறும் என்றும் ஒவ்வொரு நாளும் 2 வாக்குச்சாவடிகளுடைய எந்திரங்கள் ஆய்வு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல புகார்கள் வந்துள்ள காஞ்சீபுரம், உத்திரமேரூர், செங்கல்பட்டு உள்ளிட்ட தொகுதிகளிலும் மின்னணு வாக்குப் பதிவு எந்திரங்கள் சரிபார்ப்பு பணி தொடங்கி நடைபெற்று வருகிறது.

# தவெக நிர்வாகிகளிடம் இருந்து பெண்களைக் காக்க எந்தப் படையை அமைக்கப் போகிறார் முதல்அமைச்சர் நயினார் நாகேந்திரன்



சென்னை, ஜூலை 30

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ளஎக்ஸ்தளபதிவில்தெரிவித்திருப்பதாவது;

கட்சியில் பதவி வாங்கித் தருவதாகக் கூறி தன்னை ஆபாசமாக வீடியோ எடுத்து மிரட்டுவதாகவும், தனக்கு கொலை மிரட்டல் விடுப்பதாகவும், தனது பெண் குழந்தையையும் பாலியல் ரீதியாக விமர்சித்ததாகவும் தவெகவின்ராணிப்பேட்டைமேற்குமாவட்டச்செயலாளர் விஜய் மோகன் மீது, இளம்பெண் ஒருவர் அளித்துள்ள புகார்கள் கடும் அதிர்ச்சியளிக்கின்றன.

அதுமட்டுமன்றி, பாதிக்கப்பட்ட பெண் பலமுறை புகார் அளித்தும் கூட, இதுவரை விஜய் மோகன் கைது செய்யப்படவில்லை என்று வெளியாகியுள்ள தகவல், தமிழகக்காவல்துறையின் நேர்மையின் மீதும், அதை தனது நேரடிக் கட்டுப்பாட்டில் இயக்கும் முதல்அமைச்சரின் நிர்வாகத் திறன் மீதும் கடும் சந்தேகத்தை எழுப்புகிறது.

எனவே, தனது சொந்தக் கட்சிக்குள் இத்தனை காமுகர்களை பாதுகாத்து வைத்துக் கொண்டு, பெண்களின் பாதுகாப்பைப் பற்றி பக்கம் பக்கமாக வசனம் பேசுவதில் யாருக்கும் எந்தப் பயனும் இல்லை என்பதை முதல் அமைச்சர் ஜோசப் விஜய் உணர வேண்டும். பாலியல் குற்றச்சாட்டுகளில் சிக்கிய தவெக நிர்வாகி விஜய் மோகன் மீது உடனடியாக சட்டரீதியான மற்றும் கட்சி ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருமணம் நிச்சயிக்கப்பட்ட நர்ஸ் ஆஸ்பத்திரி மாடியில் இருந்து கீழே விழுந்து பலி



குமரி, ஜூலை 30

குமரி மாவட்டம் மார்த்தாண்டம் அருகே உள்ள ஆற்றூர் கல்லுப்பாலம் பகுதியை சேர்ந்தவர் ஜெஸ்டின் ராஜ். இவரது மகள் ஆஷிகா (வயது22). இவர் டிப்ளமோ நர்சிங் படித்துவிட்டு கடந்த 8 மாதங்களாக மார்த்தாண்டம் வெட்டுமணியில் உள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் நர்சாக வேலை பார்த்து வந்தார்.

இவருக்கு கடந்த 7ந் தேதி திருமண நிச்சயதார்த்தம் நடந்தது. அத்துடன் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் திருமணம் நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில் சம்பவத்தன்று காலையில் ஆஷிகா வழக்கம்போல்வீட்டில்இருந்துஆஸ்பத்திரிக்குவேலைக்கு புறப்பட்டு சென்றார். இதையடுத்து இரவு 10.30 மணிக்கு அவர் ஆஸ்பத்திரி மாடியில் இருந்து கீழே விழுந்து இறந்து விட்ட தாக செல்போன் மூலம் பெற்றோருக்கு தகவல் தெரிவிக்கப் பட்டது. இதைகேட்டு அதிர்ச்சி அடைந்த பெற்றோர் ஆஸ்பத்திரிக்கு விரைந்து வந்தனர்.

அங்கு ஆஷிகா பிணமாக கிடந்ததை பார்த்து கதறி அழுதனர். இதுகுறித்து தகவல் அறிந்த மார்த்தாண்டம் போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை நடத்தினர்.

போலீசாரின் முதற்கட்ட விசாரணையில், ஆஷிகா ஆஸ்பத்திரி மாடியில் நின்று கொண்டு யாரிடமோ செல்போனில் பேசிக் கொண்டி ருந்துள்ளார். அப்போது திடீரென அவர் மாடியில் இருந்து கீழே விழுந்த சத்தம் கேட்டுள்ளது. உடனே ஆஸ்பத்திரி ஊழி யர்கள் விரைந்து சென்று பார்த்த போது ஆஷிகாரத்த வெள்ளத்தில் பிணமாக கிடந்தார்.

அவரது செல்போன் உடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தது. மேற்கண்ட தகவல்கள் போலீஸ் விசாரணையில் தெரிய வந்தது.

இதையடுத்து பிணத்தை போலீசார் கைப்பற்றி ஆசாரி பள்ளம் அரசு ஆஸ்பத்திரிக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

30.07.2026

# பழனி நில மோசடி விவகாரம்: சி.பி.ஐ. விசாரிக்கக்கோரிய தி.மு.க., அ.தி.மு.க. மனுக்களின் மீது இன்று விசாரணை



மதுரை, ஜூலை 30

பழனி கோவில் நில மோசடி விவகாரம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரிக்கக்கோரிய தி.மு.க., அ.தி.மு.க. மனுக்களின் மீது நாளை மதுரை ஐகோர்ட்டில் விசாரணை நடைபெற உள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் பழனி மலை அடிவாரத்தில் உள்ள, முருகன் கோவிலுக்குச் சொந்தமான ரூ.100 கோடி மதிப்பிலான 1.40 ஏக்கர் நிலம் முறைகேடாகப் பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ள விவகாரத்தில் சி.பி.ஐ. விசாரணை கோரி, அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. வேணுகோபால் சேனாதிபதி மதுரை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனு நீதிபதிகள் சி.வி. கார்த்திகேயன் மற்றும் சக்திவேல் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது தி.மு.க. தரப்பில் ஆஜரான மூத்த வக்கீல்கள் ரவீந்திரன், வீரா கதிரவன் ஆகியோர், இதே விவகாரத்தில் சி.பி.ஐ. விசாரணை கோரி தங்கள் தரப்பிலும் வழக்கு தொடரப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அந்த வழக்கையும் சேர்த்து விசாரிக்க வேண்டும் என முறையிட்டனர்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், பழனி கோவில் நில மோசடி தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து மனுக்களையும்வருகிற30ந்தேதி(இன்று) விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்படும் என்று உத்தரவிட்டனர்.

# கரூரில் செந்தில் பாலாஜி வீட்டில் லஞ்ச ஒழிப்பு சோதனை



கரூர், ஜூலை 30

திமுகமுன்னாள்அமைச்சர் செந்தில் பாலாஜி மீது அரசு வேலை வாங்கித் தருவதாக மோசடி, டாஸ்மாக்கில் ரூ.1000 கோடி முறைகேடு, டிரான்ஸ்பார்மர்கள் வாங்கியதில் ரூ.397 கோடி முறைகேடு உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் உள்ளன.

தற்போது தவெக அரசை கவிழ்க்க சதித்திட்டம் தீட்டியது தொடர்பான வழக்கில் செந்தில் பாலாஜி மற்றும் அவரது தம்பி சகோதரர் அசோக்குமாரும் திருவல்லிக்கேணிபோலீஸ்நிலையத்தில் தினமும் ஆஜராகி கையெழுத்திட்டு வருகின்றனர். அவர்களிடம் துணை ஆணையர் ஜெயச்சந்திரன் தலைமையிலான உயர்மட்ட போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், கரூரில் ராமேஸ்வரபட்டியில் உள்ள திமுக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் வீடு உள்ளிட்ட இடங்களில் காலை 7 மணி முதல் லஞ்ச ஒழிப்பு போலீசார்சோதனைநடத்திவருகின்றனர். போலீஸ் பாதுகாப்புடன் 10க்கும் மேற்பட்ட அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

மண்மங்கலம் அருகே உள்ள செந்தில் பாலாஜியின் பூர்வீக வீடு, அவரது உதவியாளர் சுப்பிரமணி வீடு, திமுக நிர்வாகி பாஸ்கரன் வீடு மற்றும் கோதைநகர் பகுதியில் உள்ள கார்த்தி, ரமேஷ் ஆகியோரின் வீடுகள் உட்பட மொத்தம் 5 இடங்களில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.மேலும்கரூர்தொழிற்பேட்டையில் உள்ள டாஸ்மாக் மேலாளர் அலுவலகம் ஆகிய இடங்களிலும் லஞ்ச ஒழிப்பு சோதனை நடந்து வருகிறது. செந்தில் பாலாஜியின் பெற்றோரிடம் லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரணை நடத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

எதன் அடிப்படையில் இந்த சோதனை நடந்து வருகிறது என்பது குறித்த தகவல் வெளியாகவில்லை. சோதனையில் முடிவிலேயே முழு விவரமும் தெரியவரும்.

# தூத்துக்குடியில் அருணாச்சலம் மரணத்திற்கு நீதி கோரி சி.பி.எம். ஆர்ப்பாட்டம்




தூத்துக்குடி, ஜூலை 30

தூத்துக்குடியில்விசாரணைஎன்றபெயரில்அழைத்துச் செல்லப்பட்டு மரணமடைந்த அருணாச்சலம் மரணத்திற்கு நீதி கேட்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வி.வி.டி. சிக்னல் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தூத்துக்குடியைச் சேர்ந்த அருணாச்சலம் என்ற வாலிபரின்லாக்அப் மரணத்திற்கு உடந்தையாக இருந்த இன்ஸ்பெக்டர் உள்ளிட்ட அனைத்து போலீசார் மீதும் கொலைவழக்குப்பதிவுசெய்துகைதுசெய்யவேண்டும். வழக்கை தீவிரமாக விசாரித்து உரிய நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உயிரிழந்த அருணாச்சலத்தின் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் நிவாரணம் வழங்கிட வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தூத்துக்குடி வி.வி.டி. சிக்னல் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட கட்சி நிர்வாகிகள் உள்ளிட்டோர் கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.

# ரேஷன் கடைகளில் துவரம் பருப்பு, சர்க்கரை பாக்கெட்டில் வழங்க தமிழ்நாடு அரசு முடிவு

சென்னை, ஜூலை 30

ரேஷன் கடைகளில் துவரம் பருப்பு, சர்க்கரை ஆகியவற்றை பாக்கெட்டில் வழங்க, தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இதனால், எடை குறைவு பிரச்னை தடுக்கப்படுவதுடன், தரமான பொருட்கள் கிடைப்பது உறுதி செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ரேஷன்கடைகளில் அரிசி, கோதுமை இலவசமாகவும், 2 கிலோ சர்க்கரை, கிலோ துவரம் பருப்பு, லிட்டர் பாமாயில் ஆகியவை மானிய விலையிலும் விற்கப்படுகின்றன. இதில், பாமாயில் மட்டும் பாக்கெட்டில் வழங்கப்படுகிறது. மற்ற பொருட்களை வாங்க, கார்டுதாரர்கள் பை எடுத்துச் செல்ல வேண்டும். சில ரேஷன் கடை ஊழியர்கள் பொருட்களை எடை போட்டு வழங்குவதில் முறைகேடு செய்வதாக புகார்கள் எழுகின்றன. இதனால், கார்டுதாரர்கள் பாதிக்கப்படுகின்றனர். ரேஷன் பொருட்களை பாக்கெட்டில் வழங்குமாறு பலரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர். எனவே துவரம் பருப்பு, சர்க்கரையை பாக்கெட்டில் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதுதொடர்பாக வரும் பட்ஜெட்டில் அறிவிப்பு வெளியாகும் என தெரிகிறது.

# இன்றைய ராசி பலன்கள் (30.07.2026)

மேஷம்: தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படும். மூத்த அதிகாரிகளின் ஆதரவும் வழிகாட்டுதலும் கிடைக்கும். குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் நிலவும்.

ரிஷபம்: தொழிலில் இருந்த சிக்கல்கள் விலகும். வங்கி கடன் முயற்சி செய்துகொண்டிருப்பவர்களுக்கு நல்ல செய்தி கிடைக்கும். மற்றவர்களை அளவுக்கு அதிகமாக நம்புவதைத் தவிர்க்கவும்

மிதுனம்: சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம்.வாகனப்பயணங்களிலும் பணப் பரிவர்த்தனைகளிலும் அதிக கவனம் தேவை.

கடகம்: சந்திராஷ்டம நிறைவு என்பதால் பிற்பகலுக்கு மேல் நிம்மதி கூடும். கணவன்மனைவி இடையே புரிதல் அதிகரிக்கும். கூட்டுத் தொழில் மற்றும் வாடிக்கையாளர் தொடர்புகள் மூலம் நல்ல லாபம் கிடைக்கும்

சிம்மம்: தொழில் சார்ந்த விஷயங்களில் நிதானம் தேவை. அவசரப்பட்டு பெரிய முதலீடுகளைச் செய்ய வேண்டாம். மாணவர்களுக்குக் கல்வியில் நல்ல கவனம் மற்றும் முன்னேற்றம் ஏற்படும்.

கன்னி: ஆக்கப்பூர்வமான எண்ணங்கள் உருவாகும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைக்கும்.

துலாம்: புதிய திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறும். காதலிப்பவர்களுக்கு இடையே புரிந்துணர்வு கூடும். பணிபுரியும் இடத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

விருச்சிகம்: சகோதர வழியில் உதவிகள் கிடைக்கும். எடுத்த காரியங்களில் சுறுசுறுப்புடன் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கும்.

தனுசு: பணவரவு சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் சுப பேச்சுகள் சுமுகமாக முடியும். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நன்மையளிக்கும்.

மகரம்: சந்திரனின் சாதகமான நகர்வால் மன அமைதி கூடும். எதிர்பார்த்த உதவிகளும் பரிசுகளும் கிடைக்கும். ஆன்மீகக் காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும்.

கும்பம்: தேவையற்ற விரயச் செலவுகள் வரக்கூடும் என்பதால் சிக்கனம் தேவை. வெளிநாடு அல்லது வெளியூர் தொடர்பான செய்திகள் சாதகமாக வரும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

மீனம்: தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல லாபம் கிட்டும். நிலுவையில் இருந்த பாக்கிகள் வசூலாகும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் ஆதரவு கிடைக்கும்.

# தூத்துக்குடியில் அரசு பள்ளி வளாகத்தில் ஆசிரியையிடம் 16 சவரன் செயின் பறிப்பு

தூத்துக்குடி, ஜூலை 30

தூத்துக்குடி அருகே அரசு நடுநிலைப்பள்ளி வளாகத்தில் புகுந்து, பெண் ஆசிரியையிடம் 16 சவரன் தங்கச் செயினை பறித்துச் சென்ற மர்ம நபரை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

தூத்துக்குடிஅருகிலுள்ளஅத்திமரபட்டியில் மாநகராட்சி அரசு நடுநிலைப்பள்ளி இயங்கி வருகிறது. 6, 7 மற்றும் 8ம் வகுப்புகள்கொண்ட இப்பள்ளியில்தூத்துக்குடியைச்சேர்ந்த ரத்னாதலைமை ஆசிரியராகவும், புதிய துறைமுக ஊழியர் குடியிருப்பைச்சேர்ந்த சாந்தி உதவி ஆசிரியராகவும் பணியாற்றி வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று மதிய நேரத்தில் ஆசிரியை சாந்தி கைகழுவுவதற்காக பள்ளி வளாகத்தில் உள்ள கழிப்பறை பகுதிக்குச் சென்றுள்ளார். அப்போது கழிப்பறைக்குள் மறைந்திருந்த மர்ம நபர் ஒருவர், திடீரெனப் பாய்ந்து வந்து ஆசிரியை சாந்தியின் கழுத்தில் இருந்த 16 சவரன் தங்க தாலிச் செயினைப் பறித்துக் கொண்டு தப்பியோடினான்.

தாலிச் செயினைப் பறித்த வேகத்தில் ஆசிரியை கீழே விழுந்து அலறியுள்ளார். அவரது கூச்சல் சத்தம் கேட்டு மற்றவர்கள் ஓடி வருவதற்குள், அந்த மர்ம நபர் கிழக்குத் திசையில் உள்ள வாழைத் தோட்டத்திற்குள் புகுந்து தப்பியோடி விட்டான். பறிகொடுக்கப்பட்ட தங்க செயினின் மதிப்பு ரூ.20லட்சத்திற்கு மேல்இருக்கும் என கூறப்படுகிறது. இச்சம்பவம் குறித்து தகவல் அறிந்த முத்தையாபுரம் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து விசாரணை நடத்தினர். தப்பியோடிய அந்த மர்ம நபரை பிடிக்க மோப்ப நாய் மற்றும் டிரோன் கேமராக்களின் உதவியுடன் போலீசார் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வலைவீசி தேடி வருகின்றனர். பட்டப்பகலில் அரசுப் பள்ளி வளாக த்திலேயே நடைபெற்ற இந்தத் துணிகரச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப் பையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள் ளது.

# இத்தாலி கால்பந்து அணிக்கு மீண்டும் பயிற்சியாளராகும் மன்சினி



உலகக் கோப்பை கால்பந்தில் 4 முறை பட்டம் வென்ற அணியான இத்தாலி, தொடர்ந்து 3 முறை உலகக்கோப்பை போட்டிக்கு தகுதி பெறவில்லை. தகுதி சுற்றோடு வெளியேறி இருக்கிறது. இந்த நிலையில் 2030ம் ஆண்டு உலகக் கோப்பையை குறி, வைத்து இத்தாலியின் புதிய தலைமை பயிற்சியாளராக ராபர்ட்டோ மன்சினி மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். 2021ம் ஆண்டு ஐரோப்பிய சாம்பியன்ஷிப்பை வென்ற போது அந்த அணியின் பயிற்சியாளராக இருந்த முன்னாள் வீரரான ராபர்ட்டோ மன்சினி 2023ம் ஆண்டு திடீரென விலகினார்.

இரு வாரம் கழித்து சவுதி அரேபியாவின் பயிற்சியாளராக பொறுப்பேற்றார். தற்போது 3 ஆண்டுக்கு பிறகு அவரே இந்த பொறுப்புக்கு சரியான நபராக இருப்பார் என கூறி மறுபடியும் அவரை இத்தாலி கால்பந்து சம்மேளனம் இழுத்துள்ளது.

முன்னதாக இத்தாலி முன்னாள் வீரர் ஆன்ட்ரியா பிர்லோ பயிற்சியாளராக நியிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவர் ரஷியாவை சேர்ந்த பெட்டிங் நிறுவனத்துடன் ஒப்பந்தத்தில் இருந்ததால் கடைசி நேரத்தில் இத்தாலி கால்பந்து சம்மேளனம் முடிவை மாற்றிக் கொண்டது.

# “5 ஆண்டுகள் காத்திருந்தேன்” பிரான்ஸ் கால்பந்து அணியின் புதிய பயிற்சியாளர்



பிரான்ஸ் கால்பந்து அணியின் தலைமை பயிற்சியாளராக ஜினேடின் ஜிடேன் நியமிக்கப்பட்டுள்ளார். பிரான்ஸ் கால்பந்து அணியின் தலைமை பயிற்சியாளராக கடந்த 14 ஆண்டுகளாக இருந்து வந்த டிடியர் டெசாம்ஸ் (57 வயது) கடந்த 19ந் தேதி முடிந்த உலகக் கோப்பை கால்பந்து போட்டியுடன் அந்த பதவியில் இருந்து ஒதுங்கினார். சாம்பியன் பட்டம் வெல்லும் அணிகளில் ஒன்றாக கருதப்பட்ட பிரான்ஸ் அணி உலகக் கோப்பை அரைஇறுதியில் ஸ்பெயினிடம் தோல்வி கண்டு இறுதிப்போட்டி வாய்ப்பை இழந்தது. அத்துடன் அடுத்து நடந்த வெண்கலப்பதக்கத்துக்கான ஆட்டத்தில் இங்கிலாந்திடம் தோற்று 4வது இடம் பெற்றது. டெசாம்ஸ் பயிற்சியின் கீழ் பிரான்ஸ் அணி 2018ம் ஆண்டு உலகக் கோப்பையை வென்று அசத்தியது. 2022ம் ஆண்டு 2வது இடம் பிடித்தது. டெசாம்ஸ் விலகியதை தொடர்ந்து பிரான்ஸ் கால்பந்து அணியின் புதிய பயிற்சியாளராக அந்த நாட்டை சேர்ந்த முன்னாள் நட்சத்திர வீரரும், ரியல்மாட்ரிட்கிளப்பின்முன்னாள்பயிற்சியாளருமானஜினேடின்ஜிடேன்நியமிக்கப்பட்டுள்ளார். 1998ம் ஆண்டு உலகக் கோப்பையை வென்ற அணியில் முக்கிய பங்கு வகித்த அவர் 108 சர்வதேச போட்டிகளில் ஆடி 31 கோல்கள் அடித்துள்ளார். 54 வயதான ஜிடேன் 4 ஆண்டுகள் ஒப்பந்தம் செய்யப்பட்டு இருப்பதாக பிரான்ஸ் கால்பந்து சம்மேளன தலைவர் பிலிப் டியாலோ பாரீசில் நேற்று அதிகாரபூர்வமாக அறிவித்தார். பிரான்ஸ் கால்பந்து சம்மேளன தலைமை அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் நிர்வாகிகள் மற்றும் வீரர்கள் முன்னிலையில் ஜிடேன் தனது பதவி பொறுப்பை ஏற்றார். பிரான்ஸ் அணி செப்டம்பர் 25ந் தேதி நடைபெறும் நேஷன்ஸ் லீக் போட்டியில் துருக்கியை அதன் சொந்த மண்ணில் எதிர்கொள்கிறது. அந்த ஆட்டத் தில் ஜிடேன் தனது பயிற்சியாளர் பணியை தொடங்குகிறார். புதிய தலைமை பயிற்சியாளராக நியமிக்கப்பட்ட ஜிடேன் கூறுகையில், 'நான் மிகுந்த உற்சாகமாக இருக்கிறேன். எங்களிடம் அசாதாரணமான வீரர்களும், ஒரு அசாத்தியமான அணியும் உள்ளது. இந்த வாய்ப்புக்காக நான் 5 ஆண்டுகளாக காத்திருந்தேன். அதனால் தான் சற்று உணர்ச்சிவசப்படுகிறேன். பயிற்சியாளராக எனது வாழ்க்கையில் இது தான் மிகவும் மகிழ்ச்சியான நாள். நான் எப்போதும் இந்த அணியை ஒரு ரசிகராகவும், வருங்கால பயிற்சியாளராகவும் கவனித்து வந்திருக்கிறேன். அதனை நான் மறைக்கமாட்டேன். ரியல் மாட்ரிட் கிளப் பயிற்சியாளர் பொறுப்பில் இருந்து விலகிய பிறகு பிரான்ஸ் அணியை வழிநடத்த வேண்டும் என்பது மட்டுமே எனது விருப்பமாக இருந்தது.இதனால் தான் மற்ற கிளப் அணிகள் என்னை பயிற்சியாளர் பொறுப்புக்கு அணுகியதை ஏற்றுக்கொள்ளவில்லை. நான் நட்சத்திரமாக ஜொலித்த அணியின் பொறுப்பை ஏற்பது பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது. என்னுள் பல உணர்ச்சிகள் அடங்கி உள்ளன. இந்த சவாலுக்கு தயாராக இருக்கிறேன்' என்றார்.

# உலக செஸ் சாம்பியன்ஷிப்போட்டி: சிந்தாரோவை எதிர்கொள்ளும் குகேஷ்




'பிடே' உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் நடப்பு சாம்பியனான இந்தியாவின் குகேசுடன், கேண்டிடேட்ஸ் போட்டியில் வெற்றி பெற்றவரான 20 வய தான ஜவோகிர் சிந்தாரோவ் (உஸ்பெகிஸ்தான்) மோதுகிறார். தற்போது இந்த போட்டி நடைபெறும் இடம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இவ்விரு வீரர்கள் இடையிலான உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டி நவம்பர் 25ந்தேதி முதல் டிசம்பர் 15ந்தேதி வரை சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் நடை பெறுகிறது. கிளாசிக்கல் முறையில் நடைபெறும் இந்த போட்டி 14 சுற்றுகளை கொண்டது. யார் முதலில் 7.5 புள்ளியை எட்டுகிறார்களோ அவர்கள் மகுடம் சூடுவார்கள். 77 என சமநிலை நீடித்தால் டைபிரேக்கர் கடைபிடிக்கப்படும். 2024ம் ஆண்டில் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்பை இளம் வயதில் உச்சி முகர்ந்த வீரர் என்ற வரலாறு படைத்த தமிழகத்தின் 20 வயதான குகேஷ் அதை மீண்டும் தக்கவைப்பாரா? என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

சர்வதேச செஸ் சம்மேளனத்தின் (பிடே) இடைக்கால தலைவர் விஸ்வநாதன் ஆனந்த் கூறுகையில், 'இந்தியா, அமெரிக்கா, சைப்ரஸ் உள்ளிட்ட சில நாடுகள் உலக சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டியை நடத்த ஆர்வம் காட்டின. அனைத்து விதமான முன்மொழிவுகளையும் கவனமாக பரிசீலித்த பிறகு போட்டியை பொதுவான இடத்தில் நடத்த பிடே முடிவு செய்துள்ளது. நாடுகளையும், கலாசாரங்களையும் ஒன்றிணைக்கும் பாரம்பரியம் கொண்ட ஜெனீவா நகரில் இந்த போட்டி நடைபெறும். சுவிட்சர்லாந்துக்கு உலகளாவிய செஸ் சமூகத்தை வரவேற்பதை ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளோம். உள்ளூர் ரசிகர்கள் உலகத்தரம் வாய்ந்த செஸ் போட்டியை நேரில் பார்க்கும் அனுபவத்தை பெறுவார்கள். அதே நேரத்தில் உலகம் முழுவதும் உள்ள கோடிக்கணக்கான ரசிகர்கள் செஸ் உலகின் மிகப்பெரிய பட்டத்திற்கான இந்த மோதலை ஆன்லைனில் பின்தொடரலாம்' என்றார்.

# 'விஸ்வநாத் அண்ட் சன்ஸ்' படத்தின் இசை வெளியீட்டு விழா எப்போது?



ஆர்.ஜே. பாலாஜி இயக்கத்தில் சூர்யா நடித்த 'கருப்பு' திரைப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. இதனைத் தொடர்ந்து, 'வாத்தி', 'லக்கி பாஸ்கர்' உள்ளிட்ட வெற்றிப் படங்களை இயக்கிய வெங்கி அட்லூரி இயக்கத்தில் உருவாகியுள்ள 'விஸ்வநாத் அண்ட் சன்ஸ்' திரைப்படத்தில் சூர்யா நடித்துள்ளார்.

சூர்யாவின் 46வது திரைப்படமாக உருவாகியுள்ள இந்த படத்தை நாக வம்சி தயாரித்துள்ளார். இதில் மமிதா பைஜு கதாநாயகியாக நடித்துள்ளார். ராதிகா சரத்குமார், ரவீனா டாண்டன், பவானி ஸ்ரீ உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ள இந்த படத்துக்கு நிமிஷ் ரவி ஒளிப்பதிவு செய்துள்ளார். நவின் நூலி படத்தொகுப்பு செய்துள்ளார். 'விஸ்வநாத் அண்ட் சன்ஸ்' திரைப்படம் வருகிற ஆகஸ்ட் 14ந்தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

இப்படத்தின் டீசர் வெளியாகி ரசிகர்களிடம் எதிர்பார்ப்பைக் கொடுத்தது. முக்கியமாக, சஞ்சய் விஸ்வநாத் என்கிற சூர்யா தன்னைவிட 20 வயது குறைந்த பெண்ணைக் காதலிக்கும் கதை என்பதால் சுவாரஸ்யமாக இருக்கும் என்றே தெரிகிறது.

இந்நிலையில், 'விஸ்வநாத் அண்ட் சன்ஸ்' படத்தின் இசை வெளியீட்டு விழா தொடர்பான அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி, வருகிற ஆகஸ்ட் மாதம் 2ம் தேதி கோவையில் இந்த படத்தின் இசை வெளியீட்டு விழா நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# நடிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து வாட்ஸ்அப்பில் பிளாக் செய்த தாய் மனம் திறந்த நடிகை பாக்யஸ்ரீ போர்ஸ்



'மிஸ்டர் பச்சன்' திரைப்படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமான நடிகை பாக்யஸ்ரீ போர்ஸ், தனது நடிப்புப் பயணத்தின் தொடக்கத்தில் குடும்பத்தின் கடும் எதிர்ப்பை சந்தித்ததாக உருக்கமாக பகிர்ந்துள்ளார்.

'மிஸ்டர் பச்சன்' படத்தைத் தொடர்ந்து 'காந்தா', 'கிங்டம்', 'ஆந்திரா கிங் தாலுகா' உள்ளிட்ட படங்களில் நடித்த பாக்யஸ்ரீ போர்ஸ், அந்தப் படங்கள் எதிர்பார்த்த வணிக வெற்றியை பெறாததால் விமர்சனங்களையும் எதிர்கொண்டார். இருப்பினும், சமீபத்தில் வெளியான அவரது 'லெனின்' திரைப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது.

'லெனின்' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, கமல்ஹாசன் தயாரிப்பில், சிவகார்த்திகேயன் நடிப்பில் உருவாகி வரும் 'சேயோன்' திரைப்படத்தில் பாக்யஸ்ரீ போர்ஸ் கதாநாயகியாக நடித்து வருகிறார். மதுரையை பின்னணியாகக் கொண்டு ஆக்ஷன், நகைச்சுவை மற்றும் குடும்ப பொழுதுபோக்கு அம்சங்களுடன் இப்படம் உருவாகி வருகிறது.

சமீபத்திய பேட்டி ஒன்றில் பேசிய பாக்யஸ்ரீ போர்ஸ், "நான் நடிக்கப் போவதாகச் சொன்னதும் என் குடும்பத்தில் யாரும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. என் தாயிடம் பேசினேன், முடியாது என்றார். தந்தையிடம் கேட்டால், அம்மா வேண்டாம் என்கிறாளே என்றார். என் சகோதரியாவது ஆதரவு தருவாள் என்று நினைத்தால், அவளும் வேண்டாம் என்றாள். அனைவரும் எனக்கு எதிராகவே இருந்தனர். ஆனால், என் கனவை நான் கைவிட விரும்பவில்லை. அப்போது என் அம்மா என்னை வாட்ஸ்அப்பில் பிளாக் செய்துவிட்டார். சுமார் ஆறு மாதங்கள் என்னிடம் பேசவே இல்லை. என் அம்மா என்னை ஒரு நாள் நிச்சயம் பெருமையாக நினைப்பார் என்ற ஒற்றை நம்பிக்கையில் மட்டுமே முன்னோக்கி நகர்ந்தேன்." என்று நெகிழ்ச்சியுடன் பகிர்ந்தார். பாக்யஸ்ரீ போர்ஸின் இந்த உருக்கமான அனுபவம் தற்போது சமூக வலைத்தளங்களில் ரசிகர்களிடையே கவனத்தை ஈர்த்து வருகிறது.

# சென்னையில் விறுவிறுப்பாக நடைபெறும் 'சூர்யா 48' படப்பிடிப்பு

நடிகர் சூர்யா நடிப்பில் உருவாகி வரும் அவரது 48வது திரைப்படத்தின் படப்பிடிப்பு, சென்னையில் கடந்த மூன்று நாட்களாக விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதில், கதாநாயகி கயாடு லோஹருடன் சூர்யா இணைந்து நடிக்கும் முக்கிய காட்சிகள் தற்போது படமாக்கப்பட்டு வருகின்றன.

சூர்யா நடித்த 'கருப்பு' திரைப்படம் கடந்த மே மாதம் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. ஆர்.ஜே. பாலாஜி இயக்கிய அந்த படம், சூர்யாவுக்கு வெற்றிகரமான கம்பேக் படமாக அமைந்தது. அதைத் தொடர்ந்து, அவரது 46வது திரைப்படமான 'விஸ்வநாத் & சன்ஸ்' ஆகஸ்ட் 14ஆம் தேதி வெளியாக உள்ளது. இதையடுத்து, 'ஆவேஷம்' பட இயக்குநர் ஜித்து மாதவன் இயக்கத்தில் சூர்யா தனது 47வது படத்தில் நடித்து வருகிறார்.

இதற்கிடையில், இயக்குநர் ஞானவேல் இயக்கத்தில் சூர்யாவின் 48வது திரைப்படமும் உருவாகி வருகிறது. தற்காலிகமாக 'சூர்யா 48' என அழைக்கப்படும் இந்தப் படத்தை கர்நாடகாவின் முன்னணி தயாரிப்பு நிறுவனமான ஹொம்பாலே பிலிம்ஸ் தயாரிக்கிறது.

இந்தப் படத்தில் கயாடு லோஹர் கதாநாயகியாக நடிக்கிறார். மேலும், பிரகாஷ் ராஜ், யோகி பாபு, குமரவேல் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். 'கருப்பு' படத்தைத் தொடர்ந்து இசையமைப்பாளர் சாய் அபயங்கர் இந்தப் படத்திற்கும் இசையமைக்கிறார். 'ஜெய் பீம்' வெற்றிக்குப் பிறகு இயக்குநர் ஞானவேல் சூர்யா கூட்டணி மீண்டும் இணைந்திருப்பதால், இந்தப் படம் குறித்து ரசிகர்களிடையே அதிக எதிர்பார்ப்பு நிலவுகிறது. சமீபத்தில் படத்தின் பூஜை நடைபெற்ற நிலையில், தற்போது சென்னையில் தொடர்ந்து படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது. கடந்த மூன்று நாட்களாக நடைபெற்று வரும் படப்பிடிப்பில், சூர்யா மற்றும் கயாடு லோஹர் இணைந்து நடிக்கும் முக்கிய காட்சிகள் படமாக்கப்பட்டு வருகின்றன. இதனால் 'சூர்யா 48' திரைப்படத்தின் மீதான ரசிகர்களின் எதிர்பார்ப்பு மேலும் அதிகரித்துள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.